# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066991

1. District மாவட்டம் : கோயம்புத்தூர் PS காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு Year ஆண்டு: 2019 FIR No. மு.த.அ. எண்: 16/2019/AC/CB. Date நாள்: 16.07.2019 at 2300 hrs.

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: by Prevention of Corruption Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 11/06/2019 Date to நாள் வரை : 16/07/2019
   Time Period : நேர அளவு Time from நேரம் முதல் : 1600 hrs. Time to நேரம் வரை : 1930 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.07.2019 Time நேரம் : 2215 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16.07.2019 VOL II Time நேரம் : 2215 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 120 கி.மீ. தென்மேற்கு.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வனச் சரக அலுவலகம் அட்டகட்டி. வால்பாறை தாலுகா, கோயம்புத்தூர் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. உத்திரசாமி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் செல்லப்ப கவுண்டர்.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 45/2019 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் வியாபாரம் (g) Address : முகவரி SF No 676, சென்னிமலை ரோடு, அகஸ்திலிங்கம்பாளையம், காங்கேயம், திருப்பூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   எதிரி:- திரு. சக்தி கணேஷ், வனச்சரகர், அட்டகட்டி, வால்பாறை தாலுகா, கோயம்புத்தூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: —
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மதுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. [signature] 16.7.2019 — [signature] 16/07/2019.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
17/07/2019.

Name: பெயர் J. ஜெயந்தி
Rank: நிலை ஆய்வாளர் No. எண் .........
உணவு தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
[illegible].

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.16/2019/AC/CB u/s 7(a) of Prevention of Corruption Act 1988 as Amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

இன்று 16.07.2019 ஆம் தேதி செவ்வாய்கிழமை இரவு 22.15 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது திருப்பூர் மாவட்டம், காங்கேயத்தில் உள்ள அகஸ்திலிங்கம் பாளையம் குதிரை பள்ளம் ரோட்டில் அமைந்த ஸ்ரீ திருமலை பகவான் டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வரும் திரு.செல்லப்பகவுண்டர் மகன் திரு.S.உத்திரசாமி, வயது–45, என்பவர் கணினியில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கோயம்புத்தூர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பரிவு அலுவலகத்திற்கு நேரில் ஆஜராகி கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளபட்டதில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும் புகாரில் சொல்லப்பட்டுள்ளது போல் புகார்தாரரிடம் எதிரி திரு.சக்திகணேஷ், வனச்சரகர், வால்பாறை அவர்கள் லஞ்சமாக ரூ.1,30,000/– பணத்தை வாதியிடம், வாதியின் நிறுவனம் மூலம் தடிமரங்கள் மற்றும் விறகுகளை எடுத்து செல்வதற்காக அனுமதி சீட்டு பெறுவது சம்மந்தமாக கேட்டது தெரிகிறது. மேலும் புகார்தாரரின் முன்னடத்தை மற்றும் புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் ஏதும் உண்டா என்பது குறித்து மேற்கொண்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதும் இல்லை என்றும் அவரது புகார் நம்பகத்தன்மை கொண்டது என்றும் தெரியவந்தது. அதன்பேரில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியாக ஒப்புதல் பெற்றும், இன்று 16.07.2019 ம் தேதி இரவு 23.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.16/2019/AC/CB u/s 7(a) of Prevention of Corruption Act 1988 as Amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு – அனுப்புனர், திரு.S.உத்திரசாமி, வயது–45, த/பெ செல்லப்ப கவுண்டர், ஸ்ரீ திருமலை பகவான் டிரேடர்ஸ், SF.No.676, குதிரை பள்ளம் ரோடு, அகஸ்திலிங்கம் பாளையம், காங்கேபம், திருப்பூர் மாவட்டம், பெறுநர், ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு, கோயம்புத்தூர், அய்யா, நான் திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தில் உள்ள அகஸ்திலிங்கம் பாளையத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீ திருமலை பகவான் டிரேடர்ஸ் என்ற பெயரில் மர வியாபாரம் செய்து வருகிறேன். எனது நிறுவனத்திற்கு அருகாமையில் உள்ள உடையார் காலனியில்

எனது குடும்பத்துடன் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறேன். எனது சொந்த ஊர் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தாலுகாவை சேர்ந்த தங்கச்சியம்மாபட்டி கிராமம் ஆகும். அதற்கு முன்பு 15 வருடங்களாக எனது சொந்த ஊரிலேயே மரம் வாங்கி வெட்டி செங்கல் சூளைகளுக்கு வியாபாரம் செய்து வந்தேன். கடந்த 2014 ஆம் ஆண்டு டாடா காப்பி லிமிடெட்டின் மூலம் நடத்திய டெண்டரின் மூலம் வயது முதிர்ந்த தைலமரங்களை வெட்டி அதில் வரும் விறகுகளை அக்ரிமெண்டின் படி டாடா காப்பி லிமிடெட்டுக்கே சப்ளை செய்தும், அதில் கிடைக்கும் தடி மரங்களை (டிம்பர்) பொள்ளாச்சி, திருப்பூர், கோவை ஆகிய ஊர்களில் உள்ள பெரிய மரமில்களுக்கு விற்று வந்தேன். இவ்வாறாக கடந்த 2017 ஆம் ஆண்டு நடந்த டெண்டரில் கோவை மாவட்டம் வால்பாறை வட்டம், ஆனைமலை குன்றுகள் கிராமம், தி/வா.டாடா காப்பி லிமிடெட், வில்லோனி எஸ்டேட் புல எண்.23/1, 20/1A1A1C ல் வயது முதிர்ந்த 1437 தைல மரங்களை வெட்டி எடுத்து கொள்ள அனுமதி கிடைத்தது. அதன் படி மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வனக்குழு தலைவர் கோவை அவர்களது கடித எண்.19014/2017/ஈ1 நாள் 15.11.2018 ன் வாயிலாக மரங்களை வெட்டி எடுக்க அனுமதி கிடைத்தது. அதன் அடிப்படையில் டாடா காபி லிமிடெட்க்கு சொந்தமான மேற்படி வில்லோனி எஸ்டேடில் வெட்டி எடுக்க அனுமதிக்கப்பட்ட 1437 தைல மரங்களில் 1159 தைல மரங்களை மட்டும் வெட்டி எடுக்கப்பட்டது அதில் வெட்டுப் பொருட்களான உருமாற்றம் செய்யபட்ட தடிகளின் எண்ணிக்கைகள் 1754, அவைகளின் கனம் மீட்டர் 852.628 ஆகும் மற்றும் விறகுகள் 1200 மெட்ரிக் டன் ஆகும். பின்னர் டாடா காபி லிமிடெட் வில்லோனி எஸ்டேடின் சார்பாக மேனேஜர் அவர்கள் கடந்த மாதம் வால்பாறை தாசில்தார் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தன் அடிப்படையில் மேற்படி வால்பாறை தாசில்தார் அவர்கள் கடந்த மாதம் வந்து தணிக்கை செய்தார். பின்னர் அவர் கொடுத்த 10.05.2019 ஆம் தேதியிட்ட சலானை பெற்றும் அதில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.1,08,360/- ஐ (For Seniorege Fees to Timber and Firewood) கட்ட வேண்டி வால்பாறை சார் கருவூலம் (SubTreasury) சென்று முத்திரை பெற்ற பிறகு வால்பாறை ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் ல் பணம் ரூ.1,08,360/- ஐ 13.05.2019 ஆம் தேதி செலுத்தினேன். பின்னர் பணம் செலுத்திய சலானை மேற்படி வால்பாறை தாசில்தாரிடம் காண்பித்தேன். அதனை பெற்ற அவர் எனக்கு கிடைக்கப் பெற்ற தடிமரம் எண்ணிக்கைகள் 1754 அவைகளின் கனம் மீட்டர் 852.628 ஐ தமிழ்நாடு சமவெளிப் பகுதிக்கு அகற்றிக் கொள்ள மற்றும் அதில் 9 கனம் மீட்டர் தடிகளுக்கு ஒரு அனுமதிச் சீட்டு (படிவம் II) வீதம் 852.628 கனம் மீட்டர் தடிகளுக்கு 95 அனுமதிச் சீட்டுக்களை 150 நாட்கள் வாய்தாவிலும், 1600 கனம் மீட்டர் விறகுகளை (1200 மெட்ரிக் டன்)

ஆனைமலைக்குன்றுகளுக்குள் அகற்றி கொள்ள, 10 கனம் மீட்டர் விறகுகளுக்கு ஒரு அனுமதிச் சீட்டு (படிவம் II) வீதம் 1600 கனம் மீட்டர் விறகுகளுக்கு 160 அனுமதிச் சீட்டுக்களை 150 நாட்கள் வாய்தாவில் வழங்கலாம் என பரிந்துறை செய்ததின் பேரில் துணை இயக்குனர், ஆனைமலை புலிகள் காப்பகம், பொள்ளாச்சி அவர்களின் செயல் முறைகள் முன்னிலை திரு.அ.சு.மாரிமுத்து, இ.வ.ப, துணை இயக்குனர், செ.மு.ஆ.எண்.4407/2017/எல் நாள் 10.06.2019 ன்படி அனுமதி ஆணை வழங்கப்பட்டது. மேற்படி ஆணையினை நான் மேற்படி வனச்சரகர் அலுவலகத்திற்கு நேரில் சென்று அங்கிருந்த அலுவலர் திரு.ராஜேந்திரன் அவர்களிடம் 11.06.2019 ஆம் தேதி பெற்றேன். அதன்படி மேற்படி வெட்டுப் பொருட்களான 1754 எண்கள் / 852.628 கனம் மீட்டர் தடி மரங்களை தமிழ்நாடு சமவெளிப் பகுதிக்கு அகற்றிக் கொள்ள 9 கனம் மீட்டர் தடிகளுக்கு ஒரு அனுமதிச் சீட்டு (படிவம் II) வீதம் 852.628 கனம் மீட்டர் தடிகளுக்கு 95 அனுமதிச் சீட்டுக்களை 150 நாட்கள் வாய்தாவிலும், 1600 கனம் மீட்டர் விறகுகளை (1200 மெட்ரிக் டன்) ஆனைமலைக்குன்றுகளுக்குள் அகற்றி கொள்ள 10 கனம் மீட்டர் விறகுகளுக்க ஒரு அனுமதிச் சீட்டு (படிவம் II) வீதம் 1600 கனம் மீட்டர் விறகுகளுக்கு 160 அனுமதிச் சீட்டுக்களை 150 நாட்கள் வாய்தாவில் பெற வேண்டி நான் வனச்சரகர் திரு.சக்தி கணேஷ், வால்பாறை சரகம், வாட்டர் பால்ஸ் அவர்களை 11.06.2019 தேதி மாலை சுமார் 4 மணிக்கு வாட்டர் பால்ஸ் வனச்சரக அலுவலகம் சென்று நேரில் சந்தித்து மேற்படி DFO அவர்களது அனுமதி ஆணையினை காண்பித்து அனுமதி சீட்டு கேட்டேன். அதனை வாங்கி பார்த்தவர் என்னிடம் தடிமரம் மற்றும் விறகுகளுக்கு உண்டான அனுமதி சீட்டு வழங்க அவருக்கு தனியாக பணம் கொடுத்தால் மட்டுமே அனுமதி சீட்டு வழங்கமுடியும் என்று கூறினார். நானும் தருகிறேன் என்று கூறி 40 அனுமதி சீட்டை சுமார் ஒரு வாரம் கழித்து பணம் கொடுக்காமல் பெற்று விட்டேன். அதன் பிறகு ஜீலை மாதத்தின் முதல் வாரத்தில் வனச்சரகர் திரு.சக்தி கணேஷ் அவர்களை அவரது செல்போன் எண்.9488947132 / 8489545594 க்கு எனது செல்போன் எண்.9443149236 ல் மூலம் அவருக்கு தொடர் கொண்டு மேற்படி விறகுகளை எடுத்து செல்வதற்கான 50 அனுமதி சீட்டு கேட்டேன். அதற்கு ரூ.1,30,000/- அவருக்கு தனியாக கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நான் அதற்கு அவ்வளவு கொடுக்க முடியாது என்றும், கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் முடியாது என்று கூறி செல்போனை துண்டித்து விட்டார். பின்னர் கடந்த 11.07.2019 ஆம் தேதி மாலை வனச்சரகர் திரு.சக்தி கணேஷ் அவர்கள் அவரது செல்போனில் இருந்து எனது செல்போனிற்கு தொடர்பு கொண்டு அவருக்கு பணி மாறுதல் கிடைத்து விட்டதாகவும் அடுத்த நாள் 12.07.2019 ஆம் தேதி ரிலீவ் ஆகி செல்ல

இருப்பதாலும் நான் கேட்ட அனுமதி சீட்டு போட்டு கொடுத்து விடுகிறேன். அதற்கு நான் ஏற்கனவே கேட்ட பணம் ரூ.1,30,000/– ஐ கொடுத்து அனுமதி சீட்டு பெற்று கொள்ளும்படி என்னை வற்புறுத்தினார். நானும் பார்க்கலாம் என்று சொன்னேன். அதனை தொடர்ந்து இன்று 16.07.2019–ம் தேதி இரண்டு மூன்று முறை வனசரகர் திரு.சக்தி கணேஷ் அவர்கள் என்னை போனில் தொடர்பு கொண்டு பணம் கொடுக்க சொன்னார். நான் வனசரகர் திரு.சக்திகணேஷ் அவர்களை மாலை சுமார் 5.30 மணியளவில் எனது மற்றொரு செல் நெம்பர் 96269–70236 இருந்து அவரது செல்போன் எண்.9488947132 க்கு தொடர்பு கொண்டு அவருக்கு லஞ்சமாக கொடுக்க வேண்டிய பணம் பற்றி கேட்டேன். அப்போது அவர் ரூ.1,30,000/– கொடுத்திருங்க குறைவாக கொடுத்தால் பாலோ பண்ண முடியாது என்று சொன்னார். மேலும் அவர் கிளம்புவதாகவும் அதனால் அவர் பர்மிட்டெல்லாம் ரெடி செய்து விட்டதாகவும் சொல்லி அவர் ரிலீவ் ஆன தேதியில் அதாவது பழைய தேதியில் பர்மிட் போட்டு விட்டதாகவும், அதற்குண்டான பணத்தினை கட்டி விட்டதாகவும் பர்மிட் அவரிடம்; தான் இருப்பதாகவும் எப்ப வேண்டும் என்றாலும் அவர் கேட்ட பணத்தை கொடுத்து விட்டு பர்மிட்டை வாங்க சொன்னதாகவும் அவர் அடுத்த நாள் காலை அங்கிருந்து கிளம்புவதாகவும் பணம் ரூ.1,30,000/– கொடுத்து விட்டு பர்மிட்டை வாங்கிக் கொள்ளுமாறு கண்டிப்பாக சொல்லி விட்டார். எனக்காக அவர் வனத்துறைக்கு செலுத்த வேண்டிய கட்டண பணம் ரூ.2500/– ஆகும். சுமார் 2 மணிநேரம் கழித்து அவர் என்னை மீண்டும் அழைத்துள்ளார். அப்போது என்னால் அவரது போனை எடுக்க முடியவில்லை. எனவே நான் அவரை திரும்ப அழைத்த போது அவர் என்னிடம் ஏன் இன்னும் வரவில்லை என்று கேட்டார்.; நான் அவரிடம் இன்னும் பணம் ரெடியாகவில்லை என்று சொல்லி பணத்தை கொஞ்சம் குறைக்குமாறு கேட்ட போது அவர் குறைக்க முடியாது என்று சொன்னார். நான் அவரிடம் ரூ.50,000/–ம் தான் உள்ளது என்று சொன்ன போது அவர் முழு பணம் ரூ.1,30,000/–ஐ கொடுக்க வேண்டும் என்றும் நாளை காலை அவர் கிளம்புவதாகவும் அதற்குள் பணம் கொடுத்து விட்டு பர்மிட்டை வாங்கிக் கொள்ளுங்கள் இல்லாவிட்டால் ஆரணி வந்து தான் பணம் கொடுத்து பர்மிட்டை வாங்க முடியும் என்று சொல்லி, முடிந்தால் நான் கிளம்பி வரும் வழியிலேயே பணத்தை கொடுத்து விட்டு பர்மிட்டை வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னார். நான் அவரிடம் காலையில் பேசுவதாக சொன்னேன். அவரும் சரி என்று சொல்லி வைத்து விட்டார். மேற்படி இரண்டு அழைப்பின் போது அவர் பேசிய விபரங்களை நான் எனது மொபைலில் பதிவு செய்துள்ளேன். பின்னர் நான் யோசித்து பார்த்ததில் நான் அவருக்கு லஞ்சமாக பணம் ரூ.1,30,000/– ஐ கொடுத்து எனது வேலையை முடித்து கொள்ள விருப்பம் இல்லை. எனவே நான்

ஆவணங்கள் மற்றும் விறகுகளை எடுத்து செல்வதற்கான அனுமதி சீட்டு பெற என்னிடம் ரூ.1,30,000/– லஞ்சம் கேட்ட வனச்சரகர் திரு.சக்திகணேஷ் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இடம் – கோவை, நாள் – 16.07.2019. இப்படிக்கு ஒப்பம் (x/x/x/) 16/07/19 (S.உத்திரசாமி). Sir, Received the complaint on 16.07.2019 at 22.15 hrs Sd/- (x/x/x) J.Prabudass, Inspector of Police, V&AC, Coimbatore. Sir, After conducting Discreet enquiry and obtaining permission from DVAC Chennai, registered a case in Coimbatore V&AC, Cr.No.16/2019/AC/CB u/s 7(a) of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 16.07.2019 at 23.00 hrs by me. Sd/- (x/x/x) J.Prabudass, Inspector of Police, V&AC, Coimbatore. வாதியிடம் பொறிவைப்பு நடவடிக்கைக்கு விருப்பம் தெரிவித்தால் எதிரி கேட்ட லஞ்ச பணம் ரூ.1,30,000/– உடன் மறுநாள் 17.07.2019 ம் தேதி காலை 07.30 மணிக்கு கோவை ஊ.த.க அலுவலகத்திற்கு வரும்படி அறிவுறுத்தி அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பேரில் வாதியும் காலை பணத்துடன் வருவதாக கூறிவிட்டு சென்றார். முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

16/07/2019

(J.பிரபுதாஸ்)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்